முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1138

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.11.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்கார தவசியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசிதன்னை
2. ஆசிதன்னை சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள் 10.11.2022 வியாழக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல்பெருக எடுத்துரைப்பேன்
வாசி வென்ற ஞானியர் கூட்டமோடு
வையகத்தில் சூட்சுமமாய் அன்னதானசேவை
3. சேவையாற்றி உலக மக்களை மீட்டருள
சிறப்பான தவம்புரியும் அரங்கனே
அவனியில் உன் அவதார நோக்கம்
அன்பர்கட்கு வேதமாக ஆற்றலாக
4. ஆகவே இறங்கி உலகமாற்றம்
அதிசயம் மிக்கபடி இனிதே நடந்தேறும்
மாற்றம் செய்ய அரங்கன் உன்னுள் யானிருந்து
மகத்துவம் பல ஓங்காரக்குடிலில் புரிந்து வருகின்றேன்
5. வருகின்ற காலங்களில் உலக மக்கள்
வணங்கி உன் குடில் தொடர்பை மிகுதியாக்க
தருகின்ற குணங்கள் உலகோருக்கு பெருகி
தர்மம் எங்கும் எதிலும் நிறைந்து
6. நிறைந்துமே ஞானவான்கள் மிகுந்த வண்ணம்
எல்லா தேசத்திலும் ஆறுமுகன் என் வழிபாடு
வழிபாடு ஏக சித்தியாக பெருகி
வையகமே ஞான வழி வந்தடையும்
7. வந்தடைய ஞான தேசிகன் உன் சூட்சம பலம்
வையகத்தார் பெற்றவண்ணம் இந்த கலியுகத்தில் சிந்தைதெளிவு மிகுதியாகி
உலகோர்கள் சித்திமிகு ஞானவான்கள் ஆட்சிதனை
ஆட்சிதனை உன் அருள்வழியே பெற்று சிறப்பர்
8. சிறந்துமே ஞான ஆட்சி அமைத்து இந்த பேருலகில்
செப்பிடுவேன் மக்களுக்கு பாதுகாப்பு மிக்க
ஐயமற ஞானிகள் சேவையாக அகிலமெங்கும் நிரம்பி
ஆறுமுகன் என் தலைமை உருவாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–